டாஸ்மாக் கடையில் கள்ள நோட்டு மாற்ற முயற்சி: இருவர் கைது

குடியாத்தம், அக். 9: கே.வி.குப்பம் அருகே டாஸ்மாக் கடையில் கள்ள நோட்டு கொடுத்து மது புட்டி வாங்க முயன்ற லாரி ஓட்டுநரை போலீஸார் கைது செய்தனர்.



கைதான மோகன்ராஜ், முருகன்.

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பத்தை அடுத்த துரைமூலை கிராமத்தைச் சேர்ந்தவர் லாரி ஓட்டுநர் முருகன் (52). இவர் வெள்ளிக்கிழமை நாகல் அருகே உள்ள டாஸ்மாக் கடையில் ரூ. 100 நோட்டுகள் 10 கொடுத்து ரூ. 1,000-க்கு மதுபுட்டிகள் வாங்க முயன்றுள்ளார். அந்த நோட்டுகள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியதையடுத்து, கடை விற்பனையாளர் கே.வி.குப்பம் காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்தார். போலீஸார் அங்கு சென்று முருகனை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினார்.

ரூபாய் நோட்டுகளை பரிசோதித்தபோது, அவை கள்ள நோட்டுகள் எனத் தெரிய வந்தது. டாஸ்மாக்கில் மாற்ற முயன்ற ரூ. 1,000 உள்பட முருகனிடமிருந்து ரூ. 8,700 க்கான கள்ள ரூபாய் நோட்டுகளை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக வழக்குப் பதிந்த போலீஸார் முருகனை கைது செய்து, கள்ள ரூபாய்நோட்டுகள் எப்படி கிடைத்தது என்பது குறித்து அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். அவர் கொடுத்த தகவலின் பேரில் கல்யாணபெரியாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் (47) என்பவரையும் கைது செய்து, இருவரிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாலாறு தடுப்பணை அமைக்கும் பணி: திருப்பத்தூர் ஆட்சியர் ஆய்வு

வாணியம்பாடி, அக். 9: வாணியம்பாடி அருகே பாலாற்றில் தடுப்பணை அமைக்கும் பணிகளை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.

வாணியம்பாடி வட்டம், அம்பலூர் இராமநாயக்கன்பேட்டை கிராமங்களுக்கிடையே பாலாற்றின் குறுக்கே மாநில நிதி உதவியின் கீழ் ரூ. 29.50 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணியை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த தடுப்பணை மூலம் அப்பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு பாலாற்றின் இரு புறங்களிலும் உள்ள 4 கிராமங்கள், 225 கிணறுகள் பயனடைந்து, அதன் மூலம் 1657.67 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற வழிவகை செய்யப்படுவதும் நிலையில், அதன் மூலம் 20,000 விவசாய பெருமக்கள் பயனடைவார்கள் எனக் கூறப்படுகிறது. தொடர்ந்து அம்பலூர் ஊராட்சியில் சிறுவர் பூங்காவை பார்வையிட்டு சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், குடிநீர், மின்விளக்கு, துாய்மை மற்றும் இதர அடிப்படை வசதிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.



வாணியம்பாடி அருகே அம்பலூர்–இராமநாயக்கன்பேட்டை பாலாறு தடுப்பணை பணிகளை ஆய்வு செய்த திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்.

வாணியம்பாடி நகராட்சிக்குள்பட்ட கொடையாஞ்சி நீரேற்று நிலையம் முதல் இராமயன் தோப்பு நீரேற்று நிலையம் வரை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் புதியதாக நீரேற்று குழாய்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு சாலை இருபுற எல்லைகளையும் சர்வே செய்து சாலையின் ஓரத்தில் குழாய்களை பதிக்க அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது பாலாறு பாதுகாப்பு விவசாய சங்கத்தின் சார்பில் மாநில பொதுச் செயலாளர் மா.கார்த்திகேயன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து, பாலாறு பாசன கால்வாய் ஆக்கிரமிப்பு அகற்றிட வேண்டும், புல்லூர் முதல் மேட்டுப்பாளையம் வரை பாலாறு இரு கறைகளையும் அள வீடு செய்து, சீமைக் கருவேல முள் மரங்களை வேரோடு அகற்றிட பாலாறு பாதுகாப்பு விவசாயிகள் சங்கத்துக்கு அனுமதி வழங்கிட வேண்டும், கொடையாஞ்சி–அம்பலூர் மற்றும் இராமநாயக்கன்பேட்டை–புல்லூர் இடையே புதிய தடுப்பணைகள் அமைத்திட வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர்.

ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், நீர் வளத் துறை உதவி செயற்பொறியாளர் திரு.கோபி, வட்டாட்சியர்கள் கௌரிசங்கர், ஜெகதீசன், ஊராட்சிமன்ற தலைவர்கள் முருகேசன், பாரி, விவசாயிகள் உடனிருந்தனர்.

தொழிற்சாலைகளில் தமிழில் பெயர் பலகை கட்டாயம்: தொழிலகப் பாதுகாப்பு இயக்கம் எச்சரிக்கை

வேலூர், அக். 9: வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் பெயர் பலகைகளைத் தமிழில் அமைக்க வேண்டும் என்றும், தவறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழிலக பாதுகாப்பு, சுகாதார இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து வேலூர் தொழிலக பாதுகாப்பு, சுகாதார இயக்கத்தின் கோட்டம் 1 மற்றும் 2-இன் இணை இயக்குநர்கள் எம்.ஜவஹர், இ.செ.சாந்தினி பிரபா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இயங்கி வரும் அனைத்துத் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும், பெயர் பலகைகளைத் தமிழில் அமைக்க உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழில் பெயர் பலகைகளை அமைக்காத தொழிற்சாலை நிர்வாகங்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் பெயர் பலகை அமைக்கும் போது, முதலில் பெரிய எழுத்துக்களால் தமிழ் மொழியிலும், அதன் பிறகு பிற மொழிகளில் எழுத்துரு அளவைக் குறைத்தும் பெயர் பலகையை அமைக்க வேண்டும். அவ்வாறு தமிழில் பெயர் பலகை அமைக்காத தொழிற் சாலை உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைவி புகாரில் இடைநீக்கம் செய்யப்பட்ட டிஎஸ்பி ஜாபர் சித்திக் கைது

வேலூர் சிபிசிஐடி போலீஸார் நடவடிக்கை

வேலூர், அக். 9: அரக்கோணத்தில் பணியாற்றியபோது பல பெண்களுடன் தொடர்பில் இருந்து தன்னைத் தாக்கியதாக மனைவி அளித்த புகாரின் பேரில், பணியிடை நீக்கம் செய்யப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர் (டிஎஸ்பி) ஜாபர் சித்திக்கை வேலூர் சிபிசிஐடி போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தைச் சேர்ந்தவர் ஜாபர் சித்திக். குரூப்-1 தேர்வில் தேர்ச்சி பெற்று டிஎஸ்பியாக பொறுப்பேற்ற இவர், கடந்த 2024-ஆம் ஆண்டு ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் டிஎஸ்பியாகப் பணியமர்த்தப்பட்டார். அப்போது, அரக்கோணத்தைச் சேர்ந்த மென்பொருள் நிறுவன ஊழியரான ஷோபனா என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்.



டிஎஸ்பி ஜாபர் சித்திக்.

இந்த நிலையில், இருவருக்கும் இடையேகுடும்பத் தகராறு நீடித்து வந்தது. மேலும், ஜாபர் சித்திக் பல பெண்களுடன் தொடர்பில் இருந்து கொண்டு, தன்னைத் தாக்கித் துன்புறுத்தியதாக ஷோபனா அரக்கோணம் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனிடையே, கடந்த ஜூலை மாதம் ஜாபர் சித்திக் பரமக்குடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். தொடர்ந்து, தன் கணவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழக டிஜிபியிடம் ஷோபனா நேரில் புகார் மனு அளித்தார். அவரது புகாரின் பேரில், இந்த வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி டிஜிபி உத்தரவிட்டார். அதன்பேரில், வேலூர் சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து, எஸ்சி, எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் விசாரணை மேற்கொண்டனர். தொடர்ந்து, கடந்த ஆகஸ்ட் 21-ஆம் தேதி ஜாபர் சித்திக்கைத் தமிழக அரசு பணியிடை நீக்கம் செய்தது.

இந்த வழக்கு தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகுமாறு ஜாபர் சித்திக்கு சிபிசிஐடி போலீஸார் அழைப்பாணை அனுப்பியிருந்தனர். அதன்படி, வேலூர் சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜரான அவரிடம் சுமார் 7 மணி நேரம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணையின் முடிவில், வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் ஜாபர் சித்திக்கைக் கைது செய்த போலீஸார், அவரை நீதிபதி முன்பு ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

ஏழுமலையான் தரிசனம்: 16 மணிநேரம் காத்திருப்பு



திருப்பதி, அக். 9: திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 16 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 28 அறைகளில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர்.

தர்ம தரிசனத்துக்கு 16 (தரிசன டோக்கன்கள் இல்லாத வர்கள்) மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் நள்ளிரவு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குள்பட்ட குழந்தைகள், பக்தர்களும், அவர்களின் பெற்றோர்களும், இரவு 10 மணிவரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆயினும் அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏழுமலையானை வியாழக்கிழமை முழுவதும் 66,404 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 22,400 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்பித்த காணிக்கையை கணக்கிட்டதில், ரூ.4.45 கோடி வருவானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

JM Financial

JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை - IV-A பிணைய நலன் (அமலாக்க) 2002 இன் விதிகள், விதி 9(1) [விதி 8(6) காண்க].

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சேர்த்து வாசிக்கவும் பிணைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை பின்னணு ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), இணைகடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் (ஒதுக்கீடு செய்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கலந்தோய்ச்சி செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்ச்சியாக JMFARC-வினுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) EB Retail 2025 - Trust / EB Retail December 2025 - Trust ("பிணையக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்தியதியர், JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அவர்களால், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடன்களை செலுத்தவோ, மீறல் குறித்துப் பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் பேறு நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது, கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தார்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

வ எண்	கடன்தாரர்கள் / அடமானதார்கள் / ஜாமீன்தார்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	கடன் / பொத்த நிலுவைத் தொகை
1.	கடன்தாரர் 1. திரு சிவசந்தகுமார் W, C/o திரு வால்டர் இணை கடன்தாரர் : 2. திருமதி எஸ்தர்ராணி D, C/o திரு சிவசந்தகுமார் **இருவரின் முகவரி** எண் 4/156 4வது தெரு துத்திப்பட்டு ஆம்பூர், வேலூர், தமிழ்நாடு, 635811	வேலூர் மாவட்டம், ஆம்பூர் தாலுகா, துத்திப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள, பழைய நத்தம் சர்வே எண் 125-பகுதி, புதிய நத்தம் சர்வே எண் 125/2F-இல் உள்ள, கட்டிம் உப்பட 1291 சதுர அடி பரப்பளவு கொண்ட அந்த முழு நிலப்பகுதியும் இதன் எல்லைகள்: (வடக்கில்) - திரு. தட்டினசெ முனிசாமிகுக்கு சொந்தமான காலி மனை, (தெற்கில்)-கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய சாலை, (கிழக்கில்) - திருமதி. விக்டோரியா ஜெபராஜுக்குச் சொந்தமான வீடு. (மேற்கில்) - வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பாதை.	ரூ.13,00,000/- ரூ.1,30,000/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண், SEAMBUR0205677 / 700000617590 15.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.11,99,601/- மேலும் 16.09.2026 அன்று முதல் மாதந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற.

விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: சதீஷ் 9940286237, பூபாலன்.G 9944841879, பருதுணம் 8883865115 & பிரசாந்த் மொன்டே - 022-62241676

கடன் வழங்கியவரான வங்கிக்கு தெரிந்தவரையில் வில்லங்கங்கள்: ஏதும் இல்லை

மின் ஏலத் தேதி & நேரம்: 28.10.2026 நேரம்: காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் - 18.10.2026 முதல் 23.10.2026 வரை - காலை10.00 மணி முதல் பதியம் 01.00 மணி வரை

EMD உடன் ஆன்லைன் விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி: 26.10.2026

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.2000000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No. 18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 26.10.2026 அல்லது அதற்கு முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகளுக்கு மின்வகும் வலைத்தளங்களில் காணவாம். https://www.jmfinancialarc.com/Home/RetailAssets & https://www.bankeauctions.com.

தேதி: 10.10.2026
இடம்: மும்பை

ஒப்பம்/அதிகாரபூர்வ அதிகாரி
JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட்

Canara Bank கனரா வங்கி

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
மேலது தளம், கனரா டவர்ஸ், 524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018 Tel.No.2849 6339, 2849 6900

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9(5)/9(1) உடன் வீழ், அமையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை **கனரா வங்கி, சென்னை சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாளம்/ஆக்கபூர்வ/நேரடி கவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் 27.10.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தார்/ஜாமீன்தார்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: கடன்தார்கள்: 1.M/s.விக்னேஷ் டெக்னாலஜீஸ் (அதன் சார்பாக உரிமையாளர் Mrs.K.இந்திரா), 125 M B T ரோடு, முத்துகடை, ராணிப்பேட்டை, வேலூர், தமிழ்நாடு - 632401. மேலும் முகவரி, 13F 8 MF ரோடு, கெல்லீஸ் 1 நாவலூர், ராணிப்பேட்டை, வேலூர் - 632401. **2.Mrs.K.இந்திரா.** W/o.கதிரவன், 13F 8 MF ரோடு, கெல்லீஸ் 1 நாவலூர், ராணிப்பேட்டை, வேலூர்-632401, **மேலும் முகவரி,** 157 பிள்ளையார் கோயில் தெரு, நீலகண்டராயபுரம், வானஜாதாலுகா, வேலூர் - 632501, **3.Mr.N.கதிரவன்,** S/o.N.M.நடேசன் செட்டியார், **4.Mr.K.விக்ரம்,** S/o.N.கதிரவன், இருவரது முகவரி, 13F 8 MF ரோடு, கெல்லீஸ் 1 நாவலூர், ராணிப்பேட்டை, வேலூர் - 632401; **கடன் நிலுவைத்தொகை: 30.09.2026** அன்றுள்ளபடி ₹ 2,15,50,267.36 மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்துக்கள் விவரம்: சொத்தின் உரிமையாளர் Smt.K.இந்திரா.
CERSAI ID-400009645054

1. வேலூர் பதிவு மாவட்டம், காட்பாடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.440, புதிய சர்வே எண்.440/5, **மனை எண்.10, காங்கேயநல்லூர் கிராமம், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம்** என்னும் முகமையில் கிழக்கு மேற்காக 40 அடி, வடக்கு தெற்காக 59 அடி அளவுகொண்ட **2360 சதுர அடி வீட்டு மனை.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: A S பாபு மற்றும் ராஜேந்திரன்-க்கு சொந்தமான காலி மனை, கிழக்கு: 30 அடி ரோடு, மேற்கு: மனை எண்.11

2. வேலூர் பதிவு மாவட்டம், காட்பாடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.440, புதிய சர்வே எண்.440/5, **மனை எண்.11, காங்கேயநல்லூர் கிராமம், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம்** என்னும் முகமையில் கிழக்கு மேற்காக 40 அடி, வடக்கு தெற்காக 59 அடி அளவுகொண்ட **2360 சதுர அடி வீட்டு மனை.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: A S பாபு மற்றும் ராஜேந்திரன்-க்கு சொந்தமான காலி மனை, கிழக்கு: மனை எண்.10, மேற்கு: மனை எண்.12

3. வேலூர் பதிவு மாவட்டம், காட்பாடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.440, புதிய சர்வே எண்.440/5, **மனை எண்.12, காங்கேயநல்லூர் கிராமம், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம்** என்னும் முகமையில் கிழக்கு மேற்காக 40 அடி, வடக்கு தெற்காக 59 அடி அளவுகொண்ட **2360 சதுர அடி வீட்டு மனை.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: A S பாபு மற்றும் ராஜேந்திரன்-க்கு சொந்தமான காலி மனை, கிழக்கு: மனை எண்.11, மேற்கு: மனை எண்.13

4. வேலூர் பதிவு மாவட்டம், காட்பாடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.440, புதிய சர்வே எண்.440/5, **மனை எண்.13, காங்கேயநல்லூர் கிராமம், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம்** என்னும் முகமையில் கிழக்கு மேற்காக 40 அடி, வடக்கு தெற்காக 59 அடி அளவுகொண்ட **2360 சதுர அடி வீட்டு மனை.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: A S பாபு மற்றும் ராஜேந்திரன்-க்கு சொந்தமான காலி மனை, கிழக்கு: மனை எண்.12, மேற்கு: மனை எண்.14

5. வேலூர் பதிவு மாவட்டம், காட்பாடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.440, புதிய சர்வே எண்.440/5, **மனை எண்.14, காங்கேயநல்லூர் கிராமம், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம்** என்னும் முகமையில் கிழக்கு மேற்காக 40 அடி, வடக்கு தெற்காக 59 அடி அளவுகொண்ட **2360 சதுர அடி வீட்டு மனை.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: A S பாபு மற்றும் ராஜேந்திரன்-க்கு சொந்தமான காலி மனை, கிழக்கு: மனை எண்.12, மேற்கு: A S பாபு மற்றும் ராஜேந்திரன்-க்கு சொந்தமான காலி மனை.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 37,00,000/- டேவணித்தொகை ₹ 3,70,000/- ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-

வ.எண்.2: கடன்தார்கள்: 1. Mr.C.ராமானுஜம், S/o.சின்னகண்ணு மற்றும் **2.Mrs.R.வேணி,** W/o.C.ராமானுஜம், **இருவரது முகவரி:** எண்.2/27, எல்லப்பன் கோயில் தெரு, நெமிலி கிராமம் & தாலுகா, வேலூர் மாவட்டம், தமிழ்நாடு 631051; **கடன் நிலுவைத்தொகை:** 30.09.2026 அன்றுள்ளபடி ₹ 63,98,966.93 மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விவரம்: அடையாளபூர்வ கவாதீனத்தில் கீழ் உள்ளது.

(CERSAI ID 400013308748) **"லக்கி கார்டன்", கோடம்பாக்கம் கிராமம், அரக்கோணம் தாலுகா, வேலூர் மாவட்டத்தில் ஐட்டம் எண்.1:** புஞ்சை SF.எண்.346/2A-ல் உள்ள வீட்டு **மனை எண்.49-ன் அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 30 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 44.6 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 45.6 அடி **ஆக மொத்தம் 1350 சதுர அடி.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: கல்லம்புக்குது, கிழக்கு: மனை எண்.48, மேற்கு: மனை எண்.50. **ஐட்டம் எண்.2: மனை எண்.50-ல் உள்ள அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 30 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 45.6 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 47 அடி **ஆக மொத்தம் 925 சதுர அடி.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: கல்லம்புக்குது, கிழக்கு: மனை எண்.49, மேற்கு: மனை எண்.51. **ஐட்டம் எண்.3: மனை எண்.51-ல் உள்ள அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 13 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 38 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 47 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 49 அடி **ஆக மொத்தம் 1224 சதுர அடி.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: கல்லம்புக்குது, கிழக்கு: மனை எண்.50, மேற்கு: தமிழ்வாணன் நிலம். **ஐட்டம் எண்.4: மனை எண்.48-ல் உள்ள அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 30 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 43 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 44.6 அடி, **ஆக மொத்தம் 1312 சதுர அடி.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: கல்லம்புக்குது, கிழக்கு: மனை எண்.47, மேற்கு: மனை எண்.49.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 22,50,000/- டேவணித்தொகை ₹ 2,25,000/- ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-

இ-ஏல தேதி & நேரம் **27.10.2026** நேரம்: காலை 10.30 முதல் 11.30 வரை (இடைவெளி முடியும் வரை ஒவ்வொரு 5 நிமிட காலவரம்பு நீட்டிப்புகளுடன்)

டேவணித் தொகையினை 26.10.2026 தன்றோ அல்லது அதற்கு முன்னரோ இரவு 11.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிட தேதி மற்றும் நேரம்: 23.10.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (Baanknet) இன் இணையதளத்தில் நேரடியாகவோ அல்லது Challan எடுத்து Challan இல் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/NEFT மூலமாகவோ செலுத்த வேண்டும்.

வங்கியின் அடையாளபூர்வ கவாதீனத்தில் உள்ள சொத்துகளுக்கு, எவ்வித வாங்குபவர் கீழ்காணும் நிபந்தனைகளையும் விற்பனையின் வழக்கமான நிபந்தனைகளுடன் சேர்த்து கடைப்பிடிக்க வேண்டும்: 1.எவ்வித பாரபேற்பும் நபர், அடையாளபூர்வ கவாதீனத்தில் உள்ள சொத்தை தனது சொந்த ஆபத்து மற்றும் பொறுப்பில் வாங்குகிறார். 2.சொத்தின் நேரடியான கவாதீனத்தை வழங்க வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகது அல்லது கட்டாயப்படுத்தப்படாது. 3. ஏலத்தில் வெற்றி பெறுபவர், பணம் திருப்பி வழங்கப்படும் எந்த சூழலிலும் வட்டி தோ உரிமை பெறுவதாக இருக்கமாட்டார். 4.ஏலத்திற்கும் பிறகு, வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே கூறிய நிபந்தனைகள் (1 முதல் 3 வரை) ஏற்றுக்கொண்டு, அதற்கான அதிகை மற்றும் உறுதிமொழியை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும். 5.விற்பனைக்கு பிந்தைய கட்டத்தில் வெற்றி பெற்ற ஏலதாரர் அதிகை மற்றும் உறுதிமொழி சமர்ப்பிக்கத் தவறினால், ஏலத்தின் முன்பணம் (EMD) பறிமுதல் செய்யப்படும்

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணைய தளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் BAANKNET (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 70466 12345 / 63549 10172 / 82912 20220 / 98922 19848 / 81602 05051, Email:support.baanknet@psballiance.com) அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை-600 018 (Ph.No.044-2849 6339/2849 6900) E-mail: cb2361@canarabank.com எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 05.10.2026, இடம்: ச